# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். NC627/F/2019 (SA10008/F/2017 & CP206/F/2018)**

திரு. ந. கார்த்திகேயன் … மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
உதவி பொறியாளர் அலுவலகம்,
இயக்கம் மற்றும் பராமரிப்பு, கெருகம்பாக்கம் பிரிவு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்,
சங்கரலிங்கனார் தெரு, கொளப்பாக்கம்,
சென்னை - 600 128. … பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 20.07.2017 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 10.11.2017 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 22.12.2017 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 02.06.2018 &<br>25.01.2019 |
| ஆணையத்திற்கு மனு நாள் | **02.07.2018**<br>**02.04.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு ஏற்கனவே 02.06.2018 மற்றும் 25.01.2019 ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு ந. கார்த்திகேயன், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர், உதவி பொறியாளர் அலுவலகம், இயக்கம் மற்றும் பராமரிப்பு, கெருகம்பாக்கம் பிரிவு,

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், சங்கரலிங்கனார் தெரு, கொளப்பாக்கம், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 20.07.2017 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தான் கடந்த 18.09.2016ம் நாளன்று பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் வருவாய் கண்காணிப்பாளராக பணிபுரியும் அம்மையார் தன்னிடம் கையூட்டு பெற்றுத்தாகவும், மேலும் தனது இல்லம் தொடர்ந்து அலுவலகம் வரை அந்த அம்மையார் தகாத வார்த்தைகள் உபயோகித்ததாகவும், அவர் மீது என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது என்றும், தான் 18.09.2016 நாளிட்ட புகார் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் கிடப்பில் உள்ளது எனவும், அப்புகார் மீதான விரைவான தகவல்களை அளிக்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், உதவி பொறியாளர் அலுவலகம், இயக்கம் மற்றும் பராமரிப்பு, கெருகம்பாக்கம் பிரிவு, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், சங்கரலிங்கனார் தெரு, கொளப்பாக்கம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 10.11.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ உதவி பொறியாளர் அலுவலகம், இயக்கம் மற்றும் பராமரிப்பு, கெருகம்பாக்கம் பிரிவு, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், சங்கரலிங்கனார் தெரு, கொளப்பாக்கம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 22.12.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது **வழக்கு எண். SA 10008/F/2017 மற்றும் CP206/F/2018**-ல் 25.01.2019 மற்றும் 02.06.2018 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 02.07.2018 மற்றும் 02.04.2019 தேதியிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்து கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:-

- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 3 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது**

**என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் நேரிடையாக ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- மேல்முறையீட்டாளர் 20.07.2017 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.**

- **மேல்முறையீட்டாளர்** 20.07.2017 **தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். NC627/F/2019 (SA10008/F/2017 & CP206/F/2018)**

**பொது அதிகார அமைப்பு**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**உதவி பொறியாளர் அலுவலகம்,**
**இயக்கம் மற்றும் பராமரிப்பு, கெருகம்பாக்கம் பிரிவு,**
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்,**
**சங்கரலிங்கனார் தெரு, கொளப்பாக்கம்,**
**சென்னை - 600 128.**

மேல்முறையீட்டாளர்
**திரு. ந. கார்த்திகேயன்,**
**G2, ராமஜெயம் குடியிருப்பு,**
**28/70, சாயி நகர், IIவது பிரதான சாலை,**
**விருகம்பாக்கம்,**
**சென்னை - 92.**

Copy to: Judgement File/ Spare
JE/PA -12/11/2020